# சுடர்

70

மாத இதழ் 60 காசு டிசம்பர் 1986

நான்கொடியைத் தாங்குகின்றேன்
என்றாலும், என்றாலும்,
நான்கீழே சாய்ந்து விட்டால்,
நான்மாயும் முன்னரென்றன்
கையிலுள்ள கொடியதனைக்
கைமாற்றி நீவாங்கிப்
பறக்கவிடு வாயென்று
வாக்குறுதி அளிப்பாயா?
நீயும்விழ நேர்ந்தாலும்
நிமிர்ந்துநிற்கும் நங்கொடியை
மற்றொருவர் கையினிலே
மாற்றிக் கொடுப்பாயா?

— சரி பகாயா



FREE E - BOOKS , www.thamizham.net.,

| (1986 ஜனவரி முதல் ஏப்ரல் வரை) | கொலை | கொள்ளை | கற்பழிப்பு | வழிப்பறி |
|---|---|---|---|---|
| உத்திரபிரதேசம் | 2066 | 2575 | 414 | 855 |
| பீகார் | 759 | 600 | 101 | 789 |
| மத்தியபிரதேசம் | 1104 | 978 | 676 | 114 |
| மகாராஷ்டிரா | 701 | 1119 | 265 | 186 |
| ராஜஸ்தான் | 537 | 582 | 300 | 30 |
| பஞ்சாப் | 221 | 61 | 15 | 8 |
| கர்நாடகா | 548 | 256 | 59 | 117 |
| கேரளா | 237 | 44 | 51 | 9 |
| ஆந்திரபிரதேசம் | 305 | 116 | 62 | 88 |
| தமிழகம் | 448 | 130 | 64 | 24 |

—மத்திய உள்துறை அமைச்சக தகவல்கள்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## நண்பர்களே!

உங்களில் பலருக்கு
வியப்பையும், மகிழ்ச்சியையும்
அள்ளித் தெளித்தபடி
இந்த 70வது இதழ் புதிய
அளவில் வடிவெடுத்திருக்கிறது.
சுட்டியின் தொடக்க மாதங்களில்
சுட்டியின் வடிவம் பற்றி இரு வேறுபட்ட
கருத்துக்கள் வாசகர் மத்தியில் எழுந்தபோது
வாசகர்களிடம் வாக்கெடுப்பு நடத்தியதும்,
பாதிக்கு மேற்பட்டோர் சுட்டி வடிவம்
தொடரவேண்டுமென வாக்களித்ததும்
உங்களில் சிலருக்கு நினைவிருக்கலாம்.
இதனால் இவ்வளவு காலமும்
சுட்டியின் வாமன அவதாரம் தொடர்ந்தது.
கடந்த சில மாதங்களாக
சுட்டி வாசகர்களும், விற்பனையாளர்களும்,
சுட்டி அளவு பற்றி மறு பரிசீலனை
செய்யும் படி இடைவிடாது கோருகிறார்கள்.
உடனே பெரிய மாறுதல் செய்வதில் உள்ள
நடைமுறை சிககல்களை அனுசரித்து—
சுட்டியின் விலையில்,
சுட்டியின் மொத்த எழுத்துக்களின் பரப்பளவில்
மாறுதலின்றி— சுட்டியின் வடிவம் மட்டும்
புதுமையாக்கப்பட்டிருக்கிறது.
எதிலும் தனித்தன்மையோடு விளங்க விரும்பும்
சுட்டி.
வடிவத்திலும் மற்ற "ஜனரஞ்சக"
வடிவங்களோடு
இணைய விரும்பாது இப்புதிய வடிவம்
கொள்கிறது.

வாசக நண்பர்களின் எதிரொலியையொட்டியே இவ்வடிவம் தொடருவது பற்றி முடிவு செய்வோம்.

எனவே புதிய வடிவம் உங்களுக்கு உடன்பாடா இல்லையா என்று தவறாமல் எழுதுங்கள்.

பிற உங்களிடமிருந்து

அன்புடன்
ஆசிரியர் குழு



FREE E - BOOKS , www.thamizham.net.,

தமிழக முதல்வர்
அமெரிக்கா சென்றார்.
திரும்ப வந்ததும்
மந்திரி சபையில்
மாற்றங்கள் செய்தார்.

இந்தியப் பிரதமர்
கிராமங்களுக்குச் சென்று
மக்களை உழைக்கும் படி
கூறிவிட்டு இந்தியாவை
மறந்து வெளிநாடு
சென்றார்.
திரும்பி வந்ததும்
மந்திரிசபையில்
மாற்றங்கள் செய்தார்

வெளிநாட்டில்தான் மந்திரிசபை
மாற்ற ஞானோ
தயம் பிறக்குமா?

இருவரும் மந்திரிகளை மாற்று
வதில்தான் கவனமாக
இருக்கிறார்களே தவிர
மக்களின் வாழ்க்கை
மாற்றத்தைப்பற்றி சிந்திப்
பதாகத் தெரியவில்லையே.

: மறுமலர்ச்சிப்பித்தன்





FREE E - BOOKS , www.thamizham.net.,

# பதில்கள் சாவி

○ சாவி என்றாலே வாஷிங்டன் திருமணமும், அவரது ஆறு லட்ச கனவும், பதில்களும்தான் நினைவுக்கு வரும். பதில்கள் அவர் எழுத்துக்களில் பெரும்பங்கு வகிக்கிறது. மற்ற படைப்புகளில் கிடைக்காத கூர்மையும், செறிவும், கிண்டலும், லாவக மொழிநடையும் பதில்களில் காணப்படுகின்றன.

○ சாவி பதில்கள் தினமணி கதிர், குங்குமம், சாவி ஆகிய பத்திரிகைகளில் வெளியாகியிருக்கின்றன. குங்குமத்தில்தான் மிகுந்த சுவையாக இருந்தது. காரணம் சாவி கருணாநிதிக்கு வாதியாகவும், எம். ஜி. ஆருக்கு பிரதிவாதியாகவும் திகழ்ந்தார். பச்சைத் தமிழனாக தன்னை இனமாற்றம் செய்து கொண்டார். (பச்சைநிறம்-தி.மு.க.; வெளிர் பச்சை-அ.தி.மு.க.; கரும்பச்சை-தி. க.)

**○ பதில் சொல்வதில் சாவி பெரும்பாலும் கையாளுபவை :**

1. சுருக்கம் : கடற்கரையில் நிற்கும் சிலைகளெல்லாம் உயிர்பெற்றால் என்ன செய்யும்? "உட்கார்ந்து கொள்ளும்" (குங்குமம் 07-05-78)
2. நகைச்சுவை : சாவி பதில்கள் இடைவெளி விட்டு வருவதற்குக் காரணம் என்ன? "போதிய இடைவெளி இருப்பது நல்லது என்றுதானே சொல்கிறார்கள்" (சாவி 16-11-86)
3. குட்டிக்கதை சொல்லி விளக்குதல்
4. பழைய கணக்குகளை புரட்டுதல்.
5. சின்னச்சின்ன உருவகங்கள்... உவமைகள்.

**○ சாவியின் ராஜதந்திரம் :**

குங்குமத்தை கருணாநிதி ஆரம்பித்தார். சாவி அதில் ஆசிரியர். இருந்தும், 12-03-78 குங்குமம் இதழில் ஒரு கேள்விக்கு சாவி பதில் சொல்லியிருக்கிறார்: நீங்கள் குங்குமம் ஆரம்பிக்க ஏதேனும் உள் நோக்கம் உண்டா? "உள்நோக்கம் சிறந்த பொருளடக்கம். வெளிநோக்கம் அழகிய அட்டை".

சாவி பாணியில் வெளிநோக்கம் : நடிகையின் முகங்கள்-உள்நோக்கம் : சராசரி மசாலா கலவை.

✳ தற்போது சாவி பதில்கள் ஒரு பக்கம் வெளிவருகிறது. இன்றைய சாவி இதழிலேயே அலுக்காத பிரதான பக்கம் பதில்கள்தான். சாவிக்கு வயதானாலும் பதில்கள் மார்கண்டேயனாகவே என்றும் பதினாறாய் இருக்கிறது. கூடுதல் பக்கங்களை பதில்கள் ஆக்கிரமித்தாலும் நமக்கு அலுக்காது.

● "எழுத வேண்டும் என்ற பசி எப்போதும் உண்டு. ஓய்வு கிடைக்காவிட்டாலும் எழுதுவேன். எழுதுவது தான் எனக்கு ஓய்வு" (11—05—86)

நிறைய ஓய்வு எடுங்கள் பதில்கள் எழுதுவதற்காக—பதில்கள் மட்டுமே எழுதுவதற்காக.

—கா. தென்னிலவன்

(அடுத்து கல்கண்டு ஜூனியர் பதில்கள்)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மாட்டு வண்டிகள்

இந்தியாவில் 30 கோடியே 50 லட்சம் மாட்டுவண்டிகள் உள்ளன. இதில் பெரிய சிறிய நகரங்களில் மட்டும் 20 லட்சம். இந்தியாவின் மிகப் பெரிய நகரமான பம்பாயில் இன்றும் மாட்டுவண்டிகள் பெருமளவில் பயன் படுகின்றன. நவீன போக்குவரத்து வளர்ந்துள்ள நிலையில் மா. வண்டிகள் நீடிப்பது வியப்பானதுதான்.

காரணம் என்ன?

மிகக்குறைந்த செலவுள்ள சாதாரண மனிதனின் போக்குவரத்து சாதனம். நாட்டின் மூலை முடுக்குகளிலும் கிடைக்கக் கூடியது. மாடுகள் வெறுமனே இருக்கும்போது அவற்றை பயனுள்ள வழியில் பயன் படுத்த முடியும். எரிசக்தி எதுவும் தேவையில்லை. அதற்குப் பதிலாக மாடுகள் எரிவாயு உற்பத்தி செய்யும் சாணத்தைத் தருகின்றன.

மாட்டு வண்டிகளின் மூலம் 40 கோடி டன் பொருள்கள் கொண்டு செல்லப் படுகின்றன. (ரயில்கள் மூலம் 18 கோடி டன் லாரிகள் மூலம் 80 ஆயிரம் கோடி டன்).



மாட்டு வண்டிகளினால் இந்திய சாலைகளுக்கு ஆண்டு தோறும் ரூ 10 கோடி மதிப்புக்கு சேதம் ஏற்படுகிறது. மோசமான முறையில் தயாரிக்கப் பட்ட வண்டிகள் மாடுகளின் ஆரோக் கியத்தை பெரிதும் பாதிக்கின்றன.

அவ்வப்போது மாட்டுவண்டிகளில் மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. 1940ஆம் ஆண்டுகளில் டன்லப் நிறுவனம் டயர்களைப் பொருத்தி வண்டிகளைத் தயாரித்தது. அந்த முறைப்படி ஒரு கோடியே 50 லட்சம் வண்டிகளில் டயர்கள் புகுத்தப்பட்டன. பஞ்சாப் ஹரியானாவில் இவை பெருமளவில் காணப்பட்டன. காணப்படுகின்றன.

மாட்டு வண்டிகள் காலப்போக்கில் முழுக்க கைவிடப்பட்டு விடும் என்று கருதப்பட்டது. முடியவில்லை. மா.வண்டி பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப இலாகா, மாதிரி மாட்டுவண்டியை உருவாக்க ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்தது. தற்பொழுது இரண்டு டன் சுமக்கக்கூடிய இரட்டை மாட்டு வண்டியின் விலை ரூ 3500 லிருந்து 4000 வரை. ஐதராபாத்தில் உள்ள மற்றொரு நிறுவனம் மாடு இழுக்கும் டிராக்டர் ஒன்றினையே தயாரித்து வருகிறது. இதற்கு 'டிராபிகவ்டர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி உழ, பாத்தி கட்ட, வாய்க்கால், அமைக்க முடியும். நாற்று நடுவதற்கும், உரம் போடுவதற்கும், இணைப்புகளை அகற்றி விட்டு போக்குவரத்திற்கும் பயன் படுத்த முடியும்.

மாட்டு வண்டிகளை நவீனப்படுத்தினால் மட்டும் போதாது. நவீனப் போக்குவரத்து தொழில் நுணுக்கத்தை கிராமப்புறப் பகுதிகளுக்கு எடுத்துச்சென்று மாட்டு வண்டிகளை நாளடைவில் கைவிட வேண்டும். மாட்டு வண்டிகளின் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்று வருகிறவர் களுக்கு நவீன போக்குவரத்து சாதன பயிற்சி அளிக்க வேண்டும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# ரஷ்யத் திரைப் படங்கள்

கேட்டவர்: 'வரவேற்பு' ராஜராஜன்.

ரஷ்யாவில் திரைப்படத் தொழில் இங்குபோல் ஏற்ற தாழ்வு உடையதன்று. (இந்தியாவில் திரைப்படத் தயாரிப்பை ஒரு தொழிலாக இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை என்பது ஒரு புறம் இருக்கட்டும்). கலைஞர்கள், டெக்னீஷியன்கள் எல்லாருக்கும் மாத சம்பளம்தான். ஒவ்வொரு படமும் 500 பிரதிகள் எடுக்கப்பட்டு திரையிடப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே இந்தப்படங்கள் ஓடவேண்டும். பின்னர் அடுத்த படம் திரையிட வாய்ப்புத் தந்து பழைய படம் மாற்றப்படும். நன்கு ஹவுஸ்புல் ஆகி ஓடினால் கூட இந்த நிபந்தனைதான். ஆனால்.. பெயர் பெற்ற படங்களை மீண்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் திரையிடுகிறார்கள். சிறந்த படங்களைத் தயாரிப்பவர்களுக்கு, கலைஞர்களுக்கு பரிசுகளும் பாராட்டுதல்களும் உண்டு. ஆனால் ஒரு படம் 'கிளிக்' ஆகிவிட்டது என்பதற்காக ஊதியத்தை ட்ரேயடியாக உயர்த்தும் கொடுமை அங்கில்லை.

பொதுவாக ரஷ்ய படங்கள் dry ஆக இருக்கும். ஆக்ஷன், செக்ஸ் இருக்காது என்ற அபிப்ராயம் உண்டு. ஆனால் செக்ஸைத் தவிர பிற எல்லா அம்சங்களும் உண்டு. ரஷ்யர்கள் பெண்களை மதிக்கிறார்கள். பெண்களைச் சிறுமைப்படுத்தும் காட்சிகளைப் படங்களில் புகுத்துவது இல்லை. (அவர்கள் நாட்டில் கற்பழிப்பு இல்லை. இருந்தால் அதை வைத்து கதை பண்ணலாம் அல்லவா)?

கம்யூனிஸ்டுகள் நிறைந்த கேரளாவில் ரஷ்யப்படங்கள் ஓடுவதில்லை. தமிழ்நாட்டில், கர்நாடகாவில் ரஷ்யப்படங்கள் நன்றாக ஓடுகின்றன.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுந்தர ராமசாமி

சுந்தர ராமசாமி சுந்தர ரா

**ஈழத்தில் ஏற்பட்டுள்ள தமிழ் இலக்கிய வளர்ச்சி மலே சியாவில் இல்லையே, ஏன்?**

முக்கியமான கேள்விதான். ஆனால் விடைகளைத் தேடும்போது ஒரு சில காரணங்கள் கிடைத்து பல கிடைக்காமற் போய் விட்ட எண்ணம் தான் ஏற்படுகிறது.

தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த அக்கறைகளும் பெரும் புலமையும் கொண்டவர்கள் ஈழத்தில் 18, 19 ஆம் நூற்றாண்டில் கூட இருந்திருக்கிறார்கள். அதோடு தமிழக இலக்கிய இயக்கங்களோடு ஈழத் தமிழர்களுக்கு ஒரு நெருக்கமான தொடர்பு எப்போதும் இருந்து வந்திருக்கிறது. பாரதி அவர்களைப் பாதித்திருக்கிறான். 'மணிக்கொடி' காலத்தைச் சேர்ந்த புதுமைப்பித்தனும், கு. ப. ராஜகோபாலனும் பாதித்திருக்கிறார்கள். முப்பதுக்களிலும் நாற்பதுக்களிலுங்கூட ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் அவர்களுடைய எழுத்துக்களை 'மணிக்கொடி'யிலும், 'கலைமக'ளிலும் வெளியிட்டிருக்கிறார்கள். ஐம்பதுகளில் 'சரஸ்வதி பத்திரிகை மூலம் இலக்கியத் தொடர்புகள் மேலும் வலுப்பெற்றன. தமிழ் இலக்கிய இயக்கங்களை சற்றே பிரமிப்புடன் பார்க்கும் மனோபாவம் ஒன்று அப்போது ஈழத்து இலக்கிய உலகில் இருந்தது. ஒரு படைப்போ ஒரு நூலோ தமிழகத்தில் வெளி வருவது அதன் தரத்திற்கு ஒரு சான்று என்ற மயக்கமும் நிலவிற்று. ஈழத் தமிழ் இலக்கியத்தில் கைலாசபதி, சிவத்தம்பி, மஹாகவி ஆகியவர்களின் பணிகள் மிக முக்கியமானவை. நவீனப் பார்வை அங்கு பரவுவதற்கு இவர்கள் எழுத்துக்கள் முக்கிய காரணம். சிவத்தம்பியும் கைலாசபதியும் தமிழகத்தோடு மிக நெருக்கமான தொடர்பு கொண்டவர்கள். இங்கு நடைபெறும் தீவிர இலக்கியப் பணிகளை உன்னிப்பாக கவனிக்கும் வழக்கம் ஈழத்து எழுத்தாளர் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் வேரூன்றி விட்டது. நமது இலக்கிய இயக்கத்தைத் தூக்கலாகப் பார்க்கும் மாயையிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணமும் தங்கள் எழுத்துக்களைத் தரமாக உருவாக்கி, நமக்கு நிகராக ஆகி விட வேண்டும் என்ற வேகமும் அங்கு செயல்பட்டு வருகின்றன. உலகச் சிந்தனைகளுக்கு அந்தத் தீவில் எப்போதும் தடைகள் இருந்ததில்லை. நவீனப் புத்தகங்கள் நூல் நிலையங்களிலும் புத்தகக் கடைகளிலும் அவர்களுக்கு கிடைத்து வந்திருக்கின்றன.

---

வாசகர் இயக்கத்தில் பதிவு செய்துகொண்டவர்கள் துரித கதியில் செயலில் இறங்க வேண்டும். செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கவேண்டும். விண்ணப்பங்களைப் பெற்றோர், விரைவில் பூர்த்தி செய்து அனுப்பவும். விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் அஞ்சலில் தொடர்பு கொள்ளவும். அடுத்த இதழிலிருந்து இயக்கச் செய்திகள் வெளிவரும்.

—வாசகர் இயக்க அமைப்பாளர்

FREE E - BOOKS . www.thamizham.net..


ஈழத்துத் தமிழர்களில் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். உயர் கல்வியை வெளி நாடுகளில் தொடர்ந்தது மூலம் உலகத் தொடர்புகளும் பாதிப்புக்களும் அவர்களுக்கும் ஏற்பட்டன. ஈழத்து எழுத்தாளர்களில் பெரும்பான்மையோர் - அல்லது அனைவரும் என்றே சொல்லலாம்-ஏதோ ஒரு விதத்தில் மார்க்சியத் - தத்துவத்தின் பாதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்த விஞ்ஞானத் தத்துவ சுய விமர்சனங்களையும் சமூக விமர்சனங்களையும் அவர்களிடம் உருவாக்கி இருக்கிறது. சமூக ஏற்றத்தாழ்வுகளில் கோபமும் புதிய சமூகத்தைப் படைப்பதில் நம்பிக்கையும் கொண்டிருக்கிறார்கள். அதோடு அண்மை காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் அவர்களது ஆளுமைகளைக் கூராக வளர்த்திருக்கின்றன. பிழைப்புத் தேடி உலகெங்கும் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் சோதனைகளை எதிர்கொண்டு தாக்குப் பிடிக்கும் ஆற்றலை இவர்களிடம் வேகமாக வளர்த்திக் கொண்டு வருகிறது. பாதுகாப்பற்ற வாழ்க்கை கற்றுத் தரும் பாடங்களை அவர்கள் விரைவாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலேசியத் தமிழ் சமூகம் மிகப் பழமையானது. மிகப் பிற்போக்கானது. நவீன பாதிப்புக்கள் எவற்றையும் பெறுவதற்கு அவர்களுக்கு இன்று வரையிலும் சந்தர்ப்பம் கிடைக்கவும் இல்லை. அடிப்படைத் தேவைகள் பெரிதும் நிறைவேறி விட்ட பாதுகாப்பான வாழ்க்கை, அவர்களைச் சற்று மந்தமாக்கி விட்டிருக்கிறது. பொழுதுபோக்கு மனோபாவங்களிலேயே ஆழ்ந்திருக்கிறார்கள். தமிழக வணிகக் கலாச்சார முயற்சிகளுடன் மட்டுமே அவர்களுக்குத் தொடர்பு இருந்து வருகிறது. தமிழக தீவிர இலக்கிய இலக்கியம் பற்றி அங்குள்ள வாசகர்களுக்கோ எழுத்தாளர்களுக்கோ அதிகம் தெரியவில்லை. அவர்களுடைய மானசீக உலகத்தை ஆட்டிக் கொண்டிருப்பவர்கள். எம். ஜி. ஆர், கருணாநிதி, வீரமணி, சிவசங்கரி, லக்ஷ்மி, சாண்டில்யன், லேனா தமிழ்வாணன், பாலசந்தர், பாரதிராஜா, பாக்கியராஜ் ஆகியோர்களே. அதோடு மலேசியா ஒரு மதச் சார்புள்ள நாடு. இந்த அழகில் போலீஸ் கெடுபிடி வேறு. எயிட்ஸூம் கஞ்சாவும் உள்ளே வந்து விடக் கூடாது என்பதை விட மார்க்சியம் உள்ளே வந்து விடக்கூடாது என்பதில் அதிக கவனம் இரண்டாயிர வருஷப் பழமையில் அப்படியே அமுந்திக் கிடக்கிறார்கள் அங்குள்ள தமிழர்கள்.

வாசகர் எதிரொலிக்கு வருகிற கடிதங்கள் மேலோட்டமான அபிப்ராயமாக இருக்கிறது. கூர்மையான விமர்சனங்கள் எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் சென்ற இதழில் வெளியான 'ஒருகெடுகான் வாசகரின் மனக்குமுற'லுக்கான சிந்தனை எதிரொலிகள் நிறைய வரவில்லை. இதனையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு எழுதவும்.

—ஆசிரியர் குழு

FREE E - BOOKS , www.thamizham.net.,



நேருவின் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகத்தான் கொண்டாடுகிறோம். இந்திராகாந்திக்குக் கூட குழந்தைகள் மீது மிகுந்த அன்பு. நேருவும் இந்திராவும் குழந்தைகளுடன் விளையாடுவதையும், மலர்ச் செண்டுகள் பெறுவதையும், அள்ளி அணைத்துக் கொள்வதையும் செய்திப் படங்களில் பார்த்திருக்கிறேன். ராஜீவ்காந்தி இனிமேல் குழந்தைகளிடம் அப்படியெல்லாம் அன்பு காட்டுவார். ஆனாலும் அந்தச் செய்திப் படங்களில் மூக்குச் சளி ஒழுகும் ஒரு குழந்தையையும் பார்க்கவில்லை. கிழிந்த கால்சிராயுடன், கோவணத்துடன் நிற்கும் எந்தப் புழுதியாண்டிக்கும் மாமா நேருவோ அன்னை இந்திராவோ முத்தம்கொடுப்பதை நான் பார்த்ததில்லை.

☐ இன்குலாப்

FREE E - BOOKS , www.thamizham.net.,

''நான் ஓயாது சுறுசுறுப்புடன் இயங்கி வருகிறேன். நோய்வாய்ப்படுவதற்கு எனக்கு நேரமில்லை.'

—இப்படி சொல்லியே நோய் வராமல் விரட்டியடிக்க முடியும் என்ற சிந்தனையை உலகிற்கு வழங்கியவர் டாக்டர் ஜே. ஜீ ஸ்பர்ஸிம். இவர் தான் மண்டை அமைப்பு ஆராய்ச்சி இயலின் (PHRENOLOGY) தந்தை.

கடுமையான உடல் நோய்களையும், மன நோய்களையும், நம் மனோ நிலைக்குத் தகுந்தபடி இடைவிடாமல் சுறுசுறுப்பான வேலைத்திட்டம் அமைத்துக் கொண்டு குணப்படுத்திக் கொள்ள முடியும்.

பரபரப்பு அடைந்து கொண்டு (tension) எந்நேரமும் அமைவின்றி இயங்குவது வேறு. மனதில் பொறுமையும் அமைதியும் கொண்டு உடலில் சுறுசுறுப்புடன் ஓயாமல் இயங்குவது வேறு. பரபரப்பு நோய் கொணரும்; சுறுசுறுப்பு நோய் நீக்கும். ஓயாமை மருத்துவம் சுறுசுறுப்பின் பாற்பட்ட திட்டமிட்டநிதானமான வரிசையான வேலைகளால் அமைவது.

இடைவிடாத உழைப்பில் இருக்கும்போது உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும் பலர், வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் பலவித நோய்களுக்கு பலியாகிறார்கள். வார விடுமுறை கூட இல்லாமல் காலை முதல் இரவு வரை உழைக்கும் சைக்கிள் கடைக்காரர், முடிதிருத்துபவர், கடிகாரம் பழுது பார்ப்போர், பெட்டி கடைக்காரர் போன்ற இடைவிடா உழைப்பாளிகளைக் கவனியுங்கள். இவர்களின் இடைவிடா சுறுசுறுப்பால் இவர்கள் இளமையுடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கிறார்கள். மந்தமாக கடனுக்கு வேலை செய்யும் அரசு அலுவலர்கள் பலர் அடிக்கடி நோய்வாய்ப்படுவது இதனுடன் ஒப்பு நோக்கத் தக்கது.

# நமது ஓயாமை மருத்துவம்

சுறுசுறுப்பானவர்களுக்கு நோய் வந்தாலும், நோய் பாதிப்பு குறைவாக இருக்கும்; விரைவிலும் குணமாகும்.

நோய் வந்தால் செய்யும் 'ஓயாமை மருத்துவம்' : சக்திக்கேற்றபடி படியுங்கள். ஓவியம் தீட்டுங்கள்-எழுதுங்கள்-பயனாக ஏதாவது சிறு வேலை புரியுங்கள். ஆக்கப்பூர்வமாக செயல்படும்போது, அழிவுப்பூர்வமான நோய் பக்கமிருந்து உடல் அதிர்வுகள் திசை மாறி, உடலை குணப்படுத்துகின்றன.

1952இல் ஓயாமை மருத்துவர்களின் உலக கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இன்று 20 நாடுகளில் இம்மருத்துவர்கள் ஓயாமை மருத்துவம் செய்கிறார்கள்.

(அடுத்து விட்டமின் 'இ' மருத்துவம்)

—சித்தன்

## மேல் தொடர்ந்து அறிய நூல்கள்:

1. Occupational Therapy—W. R. Dunton & S.Light
2. Principles of Occupational Therapy–H. Willarys & C. Spackman.
3. An Approach to occupational Therapy— M. S. Jones.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# டாடா

இந்தியாவில் ஏகபோக குடும்பங்களின் சொத்துச் சேர்க்கும் போட்டியில் பிர்லா குடும்பம் முதலிடத்திற்கு வந்து விட்டது. டாட்டாவின் குடும்பம் இரண்டாமிடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது. பிர்லாவின் சொத்து ரூ 3 ஆயிரத்து 359 கோடிக்கு மேல். டாட்டா 3 ஆயிரத்து 120 கோடி.

ரூ 100 கோடிக்கும் மேல் சொத்துக்களைப் பெற்ற குடும்பங்கள் 61 இருக்கின்றன. 1976ம் ஆண்டில் இந்தியாவில் 67வது இடத்திலிருந்த ரிலையன்ஸ் கம்பெனி (விமல் துணி) ரூ 673 கோடி

# மேடைப் பிழிவு

உரத்த சிந்தனை என்கிற அமைப்பின் மூன்றாம் ஆண்டு விழா, சென்னை தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டிடத்தில் அதன் அமைப்பாளர்களால் (உதயம்ராம்-எஸ் வி. ராஜசேகர்) 08-11-86 அன்று நடத்தப்பட்டது. பெரும் பாலான கருத்தரங்கள் எரிச்சலையே தரும். ஆனால்... இக்கூட்டத்தில் நிறைய விஷயங்கள் பேசப்பட்டன. கருத்தரங்க தலைப்பு: தமிழ் பத்திரிகையுலகம் — ஒரு பார்வை. தலைவர்: தினமணி கதிர் கி. கஸ்தூரிரங்கன். சிலரின் உரையிலிருந்து:

கிருஷ்ணகிரி ஆர். பூபாலன்:

P. T. உஷா ஆண்கள் செய்யாத பல சாதனைகளைப் புரிந்தவர். இவரை சில பத்திரிகைகள் கொச்சைப்படுத்திவிட்டன. இவரை அலி என்று சந்தேகப்பட்டு ஒரு பத்திரிகையில் கேள்விபதில்; இன்னொரு பத்திரிகையில் இவர்

திருப்பூர் கிருஷ்ணன்:

✱ மாத நாவல்களின் சராசரி விற்பனை 1,50,000. ஆசிரியர் பெறுவது ரூ 2000 முதல் 3000 மட்டுமே! மாத நாவல்களை 70% பெண்களே படிக்கின்றனர்.

✱ சிறுகதைகள் நீளமாக இழுக்கப்பட்டு மாத நாவல்களாகின்றன. பணம் வருகிறதே! ரூ 150 சிறுகதை ரேட். மாத நாவலுக்கு அதிகமாயிற்றே!

✱ மாத நாவல்கள் பெரும்பாலும் தழுவல்களே; ஆங்கில நாவல்களின் தழுவல்களே. மற்றும்... கணவன் அடுத்த வீட்டு மனைவியைத் தழுவ, அடுத்த வீட்டு மனைவி இந்த வீட்டுக் கணவனைத் தழுவ .. இப்படி

FREE E - BOOKS , www.thamizham.net.,

சொத்துக்களைப் பெற்று 6வது இடத்திற்கு வந்து விட்டது. 1972ம் ஆண்டில் 28வது இடத்திலிருந்து டி.வி.எஸ். 1985ல் 19வது இடத்திற்கு வந்துவிட்டது. அசோக் லேலாண்டு வேக மாக முன்னேறி வருகிறது. இது 52வது இடத்திலி ருந்து 22வது இடத்திற்குத் தாவியிருக்கிறது.

தென் இந்தியாவிலுள்ள 10 தொழில் குடும்பங்களின் சொத்து மதிப்பு ரூ 2183 கோடியாகும். சிம்சன் கம்பெனியின் நிலை ஊசலாட்டமாக இருக்கிறது. இது 1972ல் 36வது இடத்திலிருந்து 1976ல் 32வது இடம். 1984ல் மீண்டும் 36 வது இடத்திற்கு வந்துவிட்டது.





# பெண் என்ன ஜடமா?

கேரளக்காரரை திருமணம் செய்து கொள்வார் என்று முக்கிய தலைப்பு; மற்றொரு பத்திரிகையில் அட்டையில் பெரிய எழுத்தில் தங்கப்பெண் P. T. உஷா என்று போட்டு அதே அட்டையில் நடிகையின் படம்.

உஷா சுப்பிரமணியன் :

✷ மனைவியை இல்லத்தரசியாக-தியாகியாக-தாயாக--குடும்ப விளக்காகப் பார்க்கிறார்கள். நண்பனாக ஏன் கருதக்கூடாது?

✷ எழுத்தாளர்கள் ஆண்களை கம்பீரம் உட்பட ஏன் எதையுமே வருணிப்பதில்லை... ஆங்கிலத்தில் வாணிக்கிறார்களே...

சுப. வீரபாண்டியன் :

✷ மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையாம். மண்ணுடனும் பொன்னுடனும் பெண்ணை சேர்க்க, பெண் என்ன ஜடமா? இவர்களை உதைக்க வேண்டாமா?

✷ சாக்கடைகளை சீர் செய்யாமல் கொசுக்களை ஒழிக்க முடியாது. சமூக மாற்றம் ஏற்படாமல் மக்களை திருத்தமுடியாது.

✷ என் மனைவியின் புடவையை நான் மடித்தால் என் மகனே எனது மீசையை சந்தேகப்படுகிறான்.

—Y. ராஜசேகர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சட்டப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் எரிக்கலாம்...





**இந்தித் திணிப்பெதிர்ப்பில் உங்களது நிலைப்பாடு என்ன? தி.மு.க பாணி சட்ட எரிப்பால் ஏதேனும் பலன் ஏற்படப் போகிறதா?**

எந்த மொழியும் திணிக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன். இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும். எந்த மொழியும் எவர்மீதும் திணிப்பதாய் இருக்கக்கூடாது. தி.மு.க. நேருவின் வாக்குறுதியை சட்டமாக்கும் கோரிக்கையை வைக்கிறது. அது ஆங்கிலத்தையும் இந்தியையும் திணிப்பதற்குத்தான் வழிவகுக்கும். ஆயினும் இதை எந்த வகையிலேனும் எதிர்த்துப் போராடியே ஆக வேண்டும். சட்டப்புத்தகம், இந்தியாவின் அரசியல் சாசனம் அப்படியொன்றும் புனிதமானதல்ல. அதன் அத்தனைப்பிரிவுகளுக்குமே தீ மூட்டலாம். தி.மு.கவின் இந்த போராட்டத்தை குறை சொல்ல முற்படும் முற்போக்கு இயக்கங்கள் இதற்கு ஒரு மாற்றுப் போராட்டத்தை வழங்குதல் வேண்டும்.

## இன்குலாப்

**விடுதலைப் புலிகளை வீட்டுக் காவலில் வைத்தவிதம் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்று கருதுகிறீர்கள்?**

அவர்களுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்பது ஒன்று. அவர்களது போராட்டத்தை பின்னடையச் செய்வதென்பது மற்றொன்று. இது ஈழத்தில் களத்தில் நிற்கும் போராளிகளின் மனோ நிலையை குன்றயச் செய்யும் முயற்சி. யாழ்பாணம் பகுதியில் சரிவுகளை சந்தித்துவரும் சிங்கள இராணுவத்திற்கு இது ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும்.

**அவர்கள் தமிழக மக்களிடம் நடந்து கொள்ளும் முறை பற்றி...**

சில போராளிகள் தவறிழைத்திருக்கக் கூடும். சில இடங்களில் தவறிழைத்ததாகக் கட்டுக்கதைகள் கட்டப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக சூளைமேட்டுச் சம்பவம். அங்கு போராளிகள் மீது வேண்டுமென்றே சமூக விரோதிகள் தாக்குதலை முதலில் தொடுத்திருக்கிறார்கள். இயன்ற மட்டும் பொறுமையைக் கடைபிடித்த போராளிகள் கடைசியில் அவர்கள் மீது சுட்டிருக்கிறார்கள். அந்த பகுதியிலுள்ள மக்களும் இதைச் சொல்கிறார்கள். அரிசன இளைஞர்கள் மீது ஈழப்போராளிகள் தாக்கிவிட்டதாக காவல்துறை கவலைப்பட்டு அறிக்கை வெளிட்டிருக்கிறது. ஆனால் அந்த பகுதியிலுள்ள போராளி



FREE E - BOOKS , www.thamizham.net.,

கள் சார்ந்திருக்கக்கூடிய EPRLF பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களையே உறுப்பினர்களாகக் கொண்டு வளர்ந்த இயக்கம். ஈழத்தில் அதன் பெயர் பள்ளன் கட்சி என்பதாகும். எனவே அரிசனங்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என்பதை விட சமூக விரோதிகளுக்கும் ஈழப்போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு மோதல். அதில் திருநாவுக்கரசு என்கிற இளைஞர் இறந்து போனது உண்மையிலேயே துரதிஷ்ட வசமானது.

# கூறுகிறார்

சமூக மாற்றத்திற்காக பத்திரிகைகளும், படைப்பாளிகளும் என்ன மாதிரியான பங்களிப்பைத் தரமுடியும்?

இந்த சமூகத்தைப் புரிந்துகொண்டு படைக்க வேண்டும். இது முற்றிலுமாக புரட்சிகரமான முறையில் மாற்றப்பட வேண்டிய சமூகம்தான் என்ற சிந்தனையை சமுதாயத்தில் உருவாக்க பத்திரிகைகளும் படைப்பாளிகளும் முயல வேண்டும்.

கலை இலக்கியங்களை பற்றிய தங்களது திட்டவட்டமான கொள்கை என்ன?

அவை சமூக உணர்வின் வெளிப்பாடுகள். அழகிய வெளிப்பாடுகள். எனவே, ஓர் அழகிய சமுதாயத்தைப் படைப்பதற்கு அவை பயன்பட வேண்டும் என்பதும், அவற்றின் வரலாற்றுக் கடப்பாடுகள்.

சிற்பம், ஓவியம் போன்ற கலைகளில் உருவம் பெரும்பங்கு வகிக்கிறது. கவிதையில்...

கவிதையும் கவிதை பற்றிய வடிவத்தைப் பெற்றாக வேண்டும். ஒன்றை கவிதை என்பது அதன் வடிவத்தை நோக்கியே! ஓவியங்களும், சிற்பங்களும் மாறுதலுக்கு உட்பட்டவை என்பதைப் போலவே கவிதையும் மாறுதலுக்கு உட்பட்டது என்பதை நாம் ஏற்றாக வேண்டும்.

பேட்டி : நா. தென்னிலவன்

வறுமையை ஒழிப்பதாய்
சொன்ன
தலைவரைப் பார்க்கச்
சென்றனர் வறியவர்கள்.
வறுமையை வெளியேற்றி
யது
தலைவரல்ல —
அவர் நாயும்
கூர்க்காவும்.

—எம். பஷீர்

சிலவரைப் பஞ்சத்தைத்
தீர்க்கச் சொல்லி
மக்கள் அனுப்பிய
மனுக்களைப்
பார்வையிட்ட மந்திரி
அறிக்கை விடுத்தார் :
இனி
கோவில் உண்டியல்கள்
தேசியமயமாக்கப்படும்.

—இராஜாதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# உள்ளாட்சி மன்றங்கள்!

தமிழ்நாட்டில் 16 ஆண்டுகளுக்குப் பின்னர் நகராட்சி, ஊராட்சி தேர்தல்கள் நடைபெற்ற போது தமிழ்நாட்டு மக்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தார்கள். நாற்றமெடுத்த சாக்கடைகளால் நாறிப்போன நகரங்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டதாக நம்பிக்கை வைத்தனர். எரியாத தெருவிளக்குகள் எல்லாம் இனி எரியப்போகிறது தெருவெல்லாம் ஒளி வெள்ளத்தில் மூழ்கப்போகிறது என்று கருதினார்கள். நகரங்களில், கிராமங்களில் நிலவுகின்ற குடி தண்ணீர் பிரச்சனைக்கு ஒரு விடிவுகாலம் வரப் போகிறது என்று எண்ணினார்கள்: குண்டு குழியான, மேடு பள்ளமான சாலைகள் பராமரிக்கப்பட்டு சீராக்கப்படும் என்று நம்பிக்கை வைத்தனர்.

மக்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்புகள் அத்தனையும் வீணாகி விட்டதே தவிர, எந்த உருப்படியான திட்டங்களையும் நகராட்சிகளோ ஊராட்சிகளோ செயல்படுத்தவில்லை, செயல்படுத்த முடியவில்லை. உள்ளாட்சி தேர்தலில் ஆளும் கட்சியினர் பெருமளவில் தோல்வியடைந்தனர். எதிர்கட்சியினர் வெற்றி பெற்றனர். இதை ஜீரணிக்க முடியாத ஆளும் கட்சி, ஊராட்சி மன்றங்களின் நிர்வாகத்தை முடக்கிப் போடும் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. உள்ளாட்சித் தலைவர்களின் பதவியைப்பறிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கேட்டு வருகிறவர்கள், சாக்கடையை சீரமைப்பதற்குக்கூட அதிகாரம் வழங்க மறுக்கின்றனர். —கே. பி. எஸ்

**இஸ்கஸ்-8 ஆம் மாநில மாநாட்டு சிறப்பு மலர்:** ஆசிரியர்: என். டி. வானமாமலை, முகவரி:- 35, அஜீல்முல்க் முதல் தெரு, சென்னை-600 006.

**சுவடிகளாகும் சுவடுகள்:** கவிதைத் தொகுப்பு (2-50) தொகுப்பு:- கவிஞர். இரா. ராஜகுமார் M/s. வானவில் உறவு பதிப்பகம், எண்: 5, சுப்பராயன் 4-வது தெரு, 5-வது சந்து, நம்மாழ்வார்ப்பேட்டை, சென்னை-600 012. இந்நூலுடன் இலவச இணைப்பாக **"கோழி கூவுது"** கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றும் இலவசமாக தரப்படுகிறது.

**எனது சிறுகதைகள்:** (16-00) என். ஆர். தாசன் M/s. பத்மா பதிப்பகம், 53, N. G. O. காலனி, குரோம்பேட்டை சென்னை-600 044.

**சிறை சென்ற ஆசிரிய சிங்கங்களே! இனி செய்ய வேண்டியது என்ன?** (1-50) —சு. சங்கரலிங்கம் 51, திருவி. க. காலனி, சென்னை-600 043.

**மாமிச உணவின் மருத்துவ குணங்கள்:** (3-00) கே. எஸ். லட்சுமணன் M/s. தமிழ்நாடு பதிப்பகம், 36-ஏ, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை-600 017.

**மே தினம்:** (5-50) அறிஞர் அண்ணா M/s. பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 108.

**மகாகவி பாரதியார் பொன் மொழிகள்:** (3-75) தொகுப்பு: அரு. ராமநாதன் M/s. [illegible]ா பிரசுரம், 35, ஆற்காடு சாலை, சென்னை-600 [illegible].

**கூறாமல் சன்யாசம் கொல்:** [illegible]மநாவல் (1-25) D. வெங்கடேஸ். 1517, தொப்பிள் பிள்ளையார் கோவில் சந்து [illegible]ர்-613003.

FREE E - BOOKS , www.thamizham.net.,






FREE E - BOOKS , www.thamizham.net.,

7வது ஐந்தாண்டுத் திட்டம், வரிகள் மூலம் 21250 கோடி ரூபாயைத் திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1800 கோடி ரூ-க்கு மேல் மறைமுக வரி என்கிற பெயரால் நம் தலையில்தான் ஏற்றப்படும்.

அஞ்சுபவர் : க. அரவிந்தன்

குழந்தைத் திருமணத்தை தடைசெய்யும் 'சாரதா சட்டம்' வெள்ளைக்காரன் காலத்திலேயே வந்து விட்டது. ஆனால் காங்கிரஸ் ஆளும் ராஜஸ்தான் மாநிலத்தில் பள்ளி மாணவிகளில் 30 சதம் திருமணம் ஆனவர்களாம். மந்திரியே தன் மகளை இங்கு சிறுவயதில் திருமணம் செய்து கொடுத்தாராம். தடைச் சட்டம் எங்கே...?



—கேட்பது: மழையின் குமுறல்

சென்னையில் கடந்த அக்டோபர் மாதம் சிறுவர்கள், வாலிபர்களை போலீஸார் கைது செய்தனர். இவர்கள் செய்த குற்றம்: காற்றாடி விட்டது.

காற்றாடி விடுவதனால் விபத்துக்கள் நடக்கின்றன. போக்குவரத்துகள் தடைப்படுகின்றன. இதனால் கைது செய்தார்களாம். கண்டன அறிக்கைகள் போலீஸ் தரப்பில் வெளியிடப்படுகிறது. ஆனால்... காற்றாடி விடுவது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனை முழுமையாக தடை செய்ய முடியாததற்குக் காரணம் அவர்கள் கொம்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பதுதான்.

காற்றாடி விடுபவர்களில் பெரும்பாலோர் தாங்களாகவே தயாரித்துக் கொள்வதில்லை. கடைகளில் காற்றாடிகள் ரூ 1லிருந்து ரூ 5-50 வரைக்கும் கிடைக்கிறது.



நானூறு மீட்டர் வரை நீளமுள்ள நூல்களும் கடைகளில் கிடைக்கிறது. காற்றாடிகளும், நூல்களும் கடைகளில் கிடைப்பதால் பலர் வாங்கி விடுகின்றனர். விற்பனைத் தடைசெய்தால் காற்றாடி விடுபவர்களது தொகை யாவது குறையுமல்லவா? இதனை விட்டுவிட்டு காற்றாடி விடுபவர்களை கைது செய்து அபாரதம் விதிப்பது சிரிப்பாக இல்லை?

நகைப்புவர் : நா. மாதவராஜன்

"திருமணம், சொத்து விவகாரங்கள், உடல் நலப்பிரச்சனைகள் - விரிவான ஆலோசனைகள் பெற எழுதவும். ஆலோசனை கட்டணம் ரூ10-00 எம். வெங்கட், 27-பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600 053.
- ADVT.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

இடவிரயம் செய்வதைப் பொறுத்துக் கொள்ள முடியாது! நடுப்பக்கத்தில் இன்னும் நாலு கவிதைகள் வெளியிட முடியும் அல்லவா?

—லேனா வாணன், ஐதராபாத்

இன்றைய பத்திரிகைகளில் 100 பக்கங்களில் ஒரு விஷயம் கூட கிடைக்காத இந்த நாளில் பக்கத்துக்குப் பக்கம் நல்ல கருத்துக்கள் ..

—S. காமராசன், II B.com , காஞ்சிபுரம்.1.

பதில்கள் விமர்சனத் தொடரில் சென்ற இதழில் வெளியான 'பைரவி பதில்கள்' பற்றிய விமர்சனத்தில் குறைகளைவிட நிறைகளைப் பற்றியே அதனை எழுதியவர் நிறைய குறிப்பிட்டிருந்தார். அட்டைப்படம் இன்றைய நகரங்களில் போக்குவரத்து நெரிசலின் ஒரு பிரதிபலிப்பாக இருந்தது.

—திருமதி கருணா மதுரைமூர்த்தி, 625001

திவ்யாவின் நெக்லஸ் ஒளிந்திருக்கும் இடத்தை யார் வந்து காட்டினாலும் அடி வாங்குவது நிச்சயம்.

—இரா. புவனேந்திரன்

''இந்திராவை தாக்கும் ராஜீவ்' என்ற தலைப்பில் அவர் கூறியிருந்த மனம் திறந்த கருத்தினை வெளியிட்டியிருந்த அதே சமயம் அவரை சுட முயற்சித்த சம்பவத்திற்குக்களங்கம் கற்பிக்கும் வகையில் கட்டுரை படைத்து வெளியிட்டிருந்தது மிகப் பொருத்தமான செயலாக எனக்குப்படவில்லை

—பி. எல். பரமசிவம், மதுரை.1.

பதில்கள் பகுதி பாராட்டத் தக்கது.

—A. பழனிசாமி, பொத்தனூர்.638 181

சிறைச்சாலைகளின் சீரழிவு பற்றி நவம்பர்'86 இதழில் எழுதியிருந்தீர்கள். சில நேரங்களில் எதிர்பாராத விதமாக சில நல்ல விஷயங்களும் நடக்கின்றன. எடுத்துக்காட்டாக...

1984ல் சுந்தரம் என்பவர் தஞ்சையில் ஒரு கொலை குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். அப்போது எம். பி. பி. எஸ்.3 வருடம் படித்துக் கொண்டிருந்தார். விசாரணைக்கு பின்னர் ஆயுள் கைதியாகி 12½ வருடம் திருச்சி, சென்னை சிறைச்சாலைகளிலிருந்தார்.

சிறையிலிருந்த நாட்களில் இவர் நடந்து கொண்ட விதம் அதிகாரிகளுக்குப் பிடித்துவிட்டது. அதிகாரிகளும், சில பத்திரிகைகளும் உதவ மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள் மூக்கில் விரல் வைக்கும் அளவிற்கு சிறப்பாக டாக்டருக்கு முடித்து பட்டமும் பெற்றார்.



வியப்படைபவர் : ஜனனி



FREE E - BOOKS , www.thamizham.net.,

# நகம் வரியாக...



**நகம் : 1**

காணவில்லை. சட்டையை மீண்டும் துழாவினான். தேடினான். காணோம். புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை. அது இல்லையேல் தேர்வு எழுத இயலாது. நாளைக் காலை பத்து மணிக்கு தேர்வு. இதில் வெற்றி பெற்றுவிட்டால்...வேலை கிடைத்து விடும். அப்பா பெரிய மனிதர்கள் சிலரைப் பிடித்து வைத்து இருக்கிறார். லஞ்சத்திற்காக அம்மாவின் ரெட்டை வடம் சங்கிலியை விற்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சில கோயில்களுக்கு தேங்காய் உடைப்பதென்று பாட்டி பிரார்த்தித்திருக்கிறார். வேலை கிடைத்தால் தான் அவன் தங்கைக்கு தூக்கம் வரும். தூங்கினால் கனவு அகப்படும். கனவில் வருங்கால கணவன் வரக்கூடும்.

திரும்ப நடந்தான். வழியெங்கும் தேடினான். பஸ் பிடித்து கடற்கரை சென்றான். மணலில் அகப்பட்டது- அவனது சுவடுகள் மட்டுமே! அடையாள அட்டை அல்ல. இந்த சென்னையில் எங்கே கிடைக்கப் போகிறது? விதியையும், கவனமின்மையையும் மானசீகமாக செருப்பால் அடித்தான்.

**நகம் : 2**

லதா நின்றாள். 'என்ன அது?' எடுத்துப் பிரித்தாள். அடையாள அட்டை. யாரோ பாவம்! தொலை தூரத்திலிருந்து தேர்வெழுத வந்திருக்கிறார். மாநிலக் கல்லூரியில் தேர்வு மையம். நாளை அவரிடம் கொண்டுபோய் கொடுக்க வேண்டும்.

ஆபீஸில் நிறைய வேலை இருக்கிறதே! பரவாயில்லை. சொல்லிக் கொள்ளலாம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

**ரகம் : 1**

"அத்தை நான் எக்ஸாம் எழுதிட்டு அப்படியே ஊருக்குப் போறேன்."

"ஏம்பா ரெண்டு நாள் தங்கிட்டு போயேன்."

"ஊர்ல நிறைய வேலை இருக்கு. மாமா வந்தா சொல்லிடுங்க, மாலதிய லட்டர் போடச் சொல்லுங்க"

வீதியில் இறங்கி நடந்தான். தியேட்டர் குறுக்கிட்டது. அபிமான நடிகை நதியா நடித்தப் படம். சரி! நடப்பது நடக்கட்டும். பகல் காட்சிப் பார்த்து விட்டு ஊருக்குப் போவோம்.

**ரகம் : 2**

லதா மாநிலக் கல்லூரியில் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். வருகிற முகங்களை ஆராய்ந்தாள். புகைப்படத்தின் சாயல் இருக்கிறதா என்று. இல்லை. கடிகாரத்தில் நேரம் பத்தரையைக் கடந்து கொண்டு இருக்கிறது...

—ஸ. ஜெ. சூர்யா

**சுட்டி சந்தா :** 12 இதழ்கள் அஞ்சலில் பெற விரைவில் ரூ 7-00 பணவிடை செய்யுங்கள்.

**முன் இதழ்கள் :** சுட்டி முன் இதழ்கள் எண் 1 முதல் 11, 14, 23, 27, 30, 31 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்பினால் தபாலில் உங்களுக்கு உடனே வந்து சேரும். 50-வது இதழ் 0-75 காசு

**சுட்டி இலவசம் :** சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்கள், உறவினர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டி வரவில்லை :** சுட்டி ஒழுங்காக வந்து சேரவில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைப்பட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15-ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம், வேறுவழியில்லை.

**ஏதாவது செய்யுங்களேன் :** புதியவர்களை சந்தாதாரராக்குங்கள். அறியாதவர்களுக்கு சுட்டியைப் பற்றிக் கூறுங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகளை அறிமுகப் படுத்துங்கள். பத்து இதழ்களை வாங்கி நீங்களே நண்பர்களுக்குள் விலைக்கு விற்பனை செய்யுங்கள். வியாபார ஸ்தாபனங்களோடு தொடர்பு கொண்டு விளம்பரங்கள் வாங்கித் தாருங்கள்

எல்லாத் தொடர்புகளுக்கும் : சுட்டி, 1494 அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS, www.thamizham.net.,

# பதில்கள்

,கார்டூனிஸ்ட் என்கிற முறையில் உங்கள் தொழிலைப் பற்றிக் கூறுங்கள்—?

**ஆர். கே. லக்ஷ்மண் :** கார்டூன் ரெடிமேட் சமாசாரம் அலல. போலித்தனமான விஷயங்களைப் பெரிது படுத்தி கிண்டல் செய்து காட்ட வேண்டியிருக்கும். தெரிந்த விஷயங்களை படம் மூலம் எடுத்துக் காட்டுவது கடினம்தான். செய்திகளைப் பலர் படித்திருப்பார்கள். ஆனால் அதில் உள்ள நகைச்சுவையை வெளிக் கொணர வேண்டும். சில சமயம் கடுமையைத் (cruelty) தவிர்க்க இயலாமல் போய்விடும். ஒரு நல்ல கார்டுனிஸ்ட் தன் தாயாரையும் கடவுளையும் தவிர மற்றவர்களுக்கு மதிப்பு தரக்கூடாது.

---

வளரும் நாடுகளில் குழந்தைகள் இறப்பு எவ்வாறு இருக்கிறது? பிரசவத்தின்போது தாயின் நிலை என்ன?

**தகவல் அதிகாரி :** ஒவ்வொரு ஆண்டும் வளரும் நாடுகளில் பத்தில் ஒரு குழந்தை தனது முதலாவது பிறந்தநாள் வரைக்கும்கூட இருப்பதில்லை. ஆண்டுதோறும் 5 லட்சம் குழந்தைகள் சத்துணவு இல்லாமலும், வயிற்றுப் போக்கினாலும் இறந்து விடுகின்றன. அது மட்டுமல்ல; ஒவ்வொரு ஆண்டும் குழந்தை பிரசவத்தின்போது சுமார் 5 லட்சம் தாயார்கள் இறக்கின்றனர்.

---

இந்தியாவின் நவீன பாதை எது...?

**த. ஜெயகாந்தன் :** அரசியலார்க்குப் பதவியும், கல்விமான்களுக்கு உத்தியோகமும், வணிகர்களுக்கு லாபமும் லட்சியமாகிவிட்டது. எல்லாரையும் பணம் ஆள்கிறது. பணம் பண்ணுவது; பதவி பிடிப்பது; பணத்தை மூலதனமாக்கிப் பதவி; பதவியை மூலதனமாக்கி பணம்—இதுவே நமது இன்றைய இந்தியாவின் 'நவீன பாதை'!

---

இலக்கிய வடிவங்களில் எது நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடியது?

**புவி. உமாசந்திரன் :** கவிதைதான். பாரதி தனது சுதந்திரப் போராட்ட உணர்வுகளை கவிதை வடிவத்தை விட்டுவிட்டு வேறு வடிவத்தில் சொல்லியிருந்தால் தோற்றே போய் இருப்பான். நமக்குள் அகப்பட்டிருக்க மாட்டான். கவிதை ஒன்றுக்குத்தான் என்றைக்கும் அந்த காலகட்டத்தின் உணர்வை வெளிப்படுத்தும் சக்தி இருக்கிறது.

---

பிரபல பத்திரிகைகள் ஒரு குறிப்பிட்ட எழுத்தாளர்களையே பயன்படுத்திக் கொள்கின்றனவே...?

**மகரிஷி :** அமாம். பிரபலமான பத்திரிகைகள் எல்லாம் மாநில சட்டசபைகள் ஒரு மந்திரி சபையை அமைத்துக் கொண்டு செயல்படுவதைப் போல சில எழுத்தாளர்களை தன் குழுவாக அமைத்துக்கொண்டு செயல்படுகின்றன.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## இடதுசாரி

18, 19ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பார்லிமெண்ட் சபைகள் வருடத்திற்கு 3 முறை கூட்டத் தொடர்களை நடத்தின. சபாநாயகர் அல்லது தலைமை வகிக்கும் அதிகாரி சபையின் நடுவே கிழக்கைப் பார்த்த படி அமர்வர்.

அவருக்கு வலப்புறமாக ஆட்சியை நடத்தும் உறுப்பினர்கள் அல்லது ஆளும் கட்சியினர் அமர்வார்கள். இவர்கள் பெரும்பான்மையினர். இதன் வேலை ஆட்சியை தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவது. இந்த மரபை ஒட்டி 'வலதுசாரி கட்சி' என்ற வாசகம் பிறந்தது. இதன் தன்மைகள் : மாற்றத்தை எதிர்ப்பது, இருப்பதை பாதுகாப்பது, நிதானப் போக்கை விரும்புவது.

## வலதுசாரி

சபாநாயகருக்கு இடது பக்கத்தில் ஆளும் கட்சியை எதிர்க்கும் கட்சியோ கட்சிகளோ அமர்ந்தன. அந்த காலகட்டத்தில் சிறு மாற்றங்கள் தேவை என்று செய்வதுகூட தீவிர (Redical) அல்லது புரட்சிகரமான (Revolutionary) கருத்தாகக் கருதப்பட்டது. சபாநாயகருக்கு இடது பக்கத்தில் அமர்ந்து ஆளும்கட்சியை 'புதிய மாற்றம்' என்ற கொள்கை அடிப்படையில் எதிர்த்ததால் 'இடதுசாரி'' என அழைக்கப்பட்டது.

இதுவே வலது, இடது சொற்களின் தோற்றுவாய்.

இப்போதெல்லாம்—

பார்லிமெண்டில் தரப்படும் இடத்தை ஒட்டி வலது, இடது இல்லை. ஆளும் கட்சிகள் வலதுசாரிகள் என்றோ, எதிர்கட்சிகள் இடதுசாரிகள் என்றோ அர்த்தமில்லை. இடதுசாரிகளில் வலது போக்கும், வலதுசாரிகளில் இடதுபோக்கும் அரசியலில் காணப்படுவதால் வலது இடது என்ற பதங்கள்கூட அர்த்தமற்றுப் போய்விட்டன.

---


வேல் டைப் பௌண்ட்ரி

- புதிய வகை உ.வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. போன்: 37693

# இளம் பிறை

(இருவார மலர்)

சிறப்புமிக்க சிறுகதைகள், மனதை தொடும் மாற்றுமொழி தொடர்கதை, எண்டமூரி வீரேந்திரநாத், சசிலா கனக துர்கா எழுதிய நிலாப்பெண், ரங்கநாயகம்மா எழுதும் ஸ்வீட் ஹோம், நவீன் போன்ற முன்னணி எழுத்தாளர்களின் தொடர் காவியங்கள் புத்தக உலகத்தின் புதிய தகவல்கள் இனிய தகவல்கள், சிறுவர் பகுதி, கட்டுரைகள், அதிசயசெய்திகள், பெண்கள் பகுதி பழக்க, பழக்க சூடிப்பூட்டும் ஆஷாவின் பதில்கள், சினிமா, இன்னும் — எத்தனையோ, அத்தனையும்சேர்ந்தது. ரூ: ஒன்று மட்டுமே!

தொடர்புக்கு: இளம்பிறை, பெட்டி எண்: 62, குன்னூர் — 643101.


FREE E - BOOKS , www.thamizham.net.,

கட்டி வரை இதழ் Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment License No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்ப்புத்தகங்கள்




## Sakthi Sugars Limited
### A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 35 tonnes to earn an additional income of Rs. 3,000/- Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiary sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (i) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (ii) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (iii) V. M. [illegible] Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018

Reg. Office & Factory:
Sakthinagar-638 315,
Periyar District.


ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், 1494- அண்ணா நகர், 13-வது பிரதான சாலை, சென்னை-600 040. அச்சிடுவோர்: எஸ். எம். ரவீந்திரன் பிரஸ், ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005 ●●

FREE E - BOOKS , www.thamizham.net.,